**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 672/2025**
**U/s. 294(b),323,506(ii) IPC**
**PROSECUTION WITNESS NO. 3 (LW. 7)**

| | |
|---|---|
| **Name** : திரு. வேலாயுதம் **(IO)** | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1**எதிரி ஆஜர்**. 2,3** எதிரிகள் ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர், செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 672/2025 04.03.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.45 AN**

**முதல் விசாரணை:**

**1**, நான் தஞ்சாவூர் நகர மேற்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 29.03.2024 ம் தேதி 16.00 மணியளவில் தலைமை காவலர் திரு. மாரியப்பன் நிலைய பொறுப்பிலிருந்தபோது வாதியின் வாக்குமூல புகாரினை , பின்பு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 280/2024 , சபி. 294(b),323 506(ii) இதசவின் படி 29.03.2024 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் வாக்குமூலத்தினை இணைத்து அதன் ஒரு நகலை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 ற்கு அனுப்பி வைத்தும் அதன் மற்றொரு நகலை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு 22.03.2024 ம் தேதி 17.00 மணியளவில் வழக்கில் சம்பயிடமான தஞ்சாவூர் கரந்தை மேட்டுதெரு, வாதியின் வீட்டு அருகில் சாட்சிகள் நாகராஜன் மற்றும் மனோகரன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 , மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆகும்**. பின்பு மகஜர் சாட்சிகள் நாகராஜன், மனோகரன் மற்றும் இதர பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு எதிரியை தேடி வந்த நிலையில் வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்பு நான் பணிஓய்வு பெற்றதை அடுத்து வழக்கு கோப்பினை நிலையம் வசம் ஒப்படைத்ன். பின்னிட்டு வழக்கினை விசாரித்த உதவி ஆய்வாளர் திரு. தேசியன் என்பவர் சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்ததில் என்னிடம் கூறிய தகவலையே அவரிடம் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு. மாரியப்பன் என்பரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து கொண்ட உதவி ஆய்வாளர் அவர்கள் சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், தனது புலன் விசாரணையிலிருந்தும் மேற்படி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 10.03.2025 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>1–3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** எதிரிடை வழக்கில் நான் தான் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். எதிரிடை வழக்கின் சம்பவமானது இந்த வழக்கின் சம்பவத்திற்கு 3 நாட்கள் முன்பு நடந்து என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடையில் சொத்து பிரச்சனை உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புகார்தாரரும் , 1 வது எதிரியும் அண்ணன் தங்கை என்றால் தெரியாது. இந்த வழககின் சம்பவதினத்திலிருந்து எத்தனை நாட்கள் கழித்து சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு சம்பவயிடம் சென்றேன். இந்த வழக்கில் சம்பவயிடமாக காட்டப்பட்டுள்ள இடம் என்னவென்று சொல்லமுடியுமா என்றால் மணிவண்ணன் வீட்டின் வாசல் தெரு முன்பு சம்பவம் நடந்தது. எதிரிடை வழக்கில் புகாரினை எப்போது கொடுத்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. புகார்தாரர் மீது 1 வது எதிரி கணவர் செல்வகுமார் கொடுத்த புகாரில் விசாரணை நிலுவையில் இருந்த சமயத்தில் 3 நாட்கள் கழித்து வழக்கினை சமரசம் செய்யும் நோக்கில் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரில் வழக்கு பதியப்பட்டு நான் புலன் விசாரணை செய்தேன் என்றால் சரியல்ல.

2. நான் முறையாக சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவர கணக்கிற்காக வீட்டிலிருந்த எதிரிகளை விசாரணைக்காக அழைத்து வந்து பொய்யாக வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் வழக்கு பதியப்பட்டு பின் 10.3.2025 அன்று எதிரிகள் முன்ஜாமீன் பெற்றார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.பொய் வழக்கு என்பதால் எதிரிகள் உடனடியாக கைது செய்யபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு வழக்கு பதியப்பட்ட விவரமே தெரியாது என்றால் சரியல்ல. 3 வது எதிரி முதியவர் என்பதால் அவரால் மேற்படி குற்ற செயலில் ஈடுபடும் அளவுக்கு உடல் வழு இல்லை என்றால்

சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.